காரணத்தால் இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து, சேலம் சென்ட்ரல் ஜெயில் பக்கத்தில் இருக்கிற அந்த நிலத்திலே அமைக்கப்படுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இந்த இரண்டு நிர்வாகங்களும் இரண்டு வேறுபட்ட துறைகளாகும். ஆகவே, மாநிலத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துடன், மாவட்ட நிர்வாகம் தொடர்புடைய அலுவலகங்கள் மட்டும்தான் ஒன்றாக அமைந்து இருக்கின்றன. இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை விரிவுபடுத்த போதிய நிதி ஒதுக்கீடு இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற, மாநகராட்சிப் பள்ளியிலே இருக்கிற இடத்தை விரிவுபடுத்த முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 518. திரு. செது. வரதராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

518—

செங்கல்பட்டு மலைப்பகுதிகளுக்குக் குடிநீர் வசதி

22855--திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடிநீர் தடையின்றிக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.எம்.செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு நகரைச் சுற்றியுள்ள மலைப் பகுதியில் குறிப்பாக, தட்டான் மலை மற்றும் நத்தம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு போதிய குடிநீர் வசதியளிக்க ரூ. 15 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில், இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. செது. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு பகுதியில் உள்ள தட்டான் மலைப் பகுதியில் ஒரு

ரிசர்வாயர் கட்டுவதற்கும், அதற்கு மேட்டுப் பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிகளுக்குப் பக்கத்திலே இருக்கிற நீஞ்சள்மடுவிலே ஒரு பம்பிங் ஸ்டேசன் கட்டுவதற்கு ஒரு திட்டத்தை வகுத்து, அதற்கு நிதியைக் கேட்டு அரசிடம் 11 லட்சம் ரூபாய் தேவை என்று சுமார் 20 வருட காலமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிதி கிடைக்காத சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி, அவர்கள் பார்வையிட்டு, சிறுசேமிப்பு நிதியிலிருந்து 10 லட்சமும், அதற்குப் பிறகு பொது நிதியிலிருந்து 5 லட்சமும் கொடுத்து, அங்கே ரிசர்வாயர் மற்றும் பம்பிங் ஸ்டேசன் ஆகியவற்றை மலைப் பகுதியில் கட்டுவதற்கு, அந்தப் பணிகள் துவக்கப்பட்டு, மெயின் லைன்கள் போடுகின்ற பணியும் முடிந்திருக்கிறது, முடிகின்ற தருவாயில் இருக்கின்றன. அதற்குப்பிறகு, டிஸ்டிரிபியூசன் செய்வதற்கு மெயின் லைன், பைப் போடுவதற்கு பணம் இல்லை. அரசிடம் கேட்டு உள்ள 11 லட்சம் ரூபாயை அரசு கனிவோடு கொடுத்தால், அந்தத்திட்டம் நிறைவேறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும். ஆகவே அதை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற தட்டான்மலை மற்றும் நத்தம் பகுதிகள் மலைப் பகுதியில் அமைந்திருக்கிற காரணத்தாலும், உயரமான இடமாக இருக்கிற காரணத்தாலும், அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் போதிய குடிநீர் கிடைக்க குடிநீர்த் திட்டம் சுமார் 21 லட்சம் மதிப்பீட்டிலே தயாரிக்கப்பட்டது. ஆனால், அதற்குப்பிறகு இது சம்பந்தமாக குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திருத்திய மதிப்பீட்டை உருவாக்க வேண்டும் என்று ஒரு கருத்துருவை அங்கேயிருக்கிற கண்காணிப்புப் பொறியாளருக்கு அனுப்பிய காரணத்தாலே, அந்தத் திட்டத்திற்கு என விரிவான திருத்திய மதிப்பீட்டு ரூபாய் 15 லட்சத்து 20 ஆயிரம் அளவிற்கு இன்றைக்கு திருத்தி அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் கையகத்திலே இருக்கிற வைப்பு நிதித் திட்டத்தின் மதிப்பீட்டில், இன்றைக்கு 10 லட்ச ரூபாயை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மேலும் ஒரு 5 லட்ச ரூபாயும், ஆக மொத்தம் இன்றைக்கு 15 லட்சம் ரூபாய் அந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடே 15 லட்சத்து 20 ஆயிரம் என்ற வகையில், தற்போதைக்கு வழங்கப்பட்டு இருக்கிற அந்த நிதி போதுமானதாக இருக்கிறது. அதைப்போலவே இன்றைக்கு அங்கே இருக்கிற செங்கற்பட்டு நகராட்சியும் இந்தத் திட்டத்திற்கு என 1 லட்சம் ரூபாயை செலுத்தி இருக்கிறது.

மேலும் ரூ. 4.20 இலட்சம் அளவில் இன்றைக்கு செங்கற்பட்டு நகராட்சி இந்தத்திட்டத்திற்கென டிஸ்ட்ரிபியூஷன் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பகிர்மானக் குழாய்களுக்கு செலுத்தவேண்டுமென்று இன்றைக்கு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத்திட்டத்திலே தற்போது தலைமைப் பணியிடம், நீரேற்று நிலையம், நீர் இறைவைகள் பொருத்துதல், நீரேற்றுக் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. இதற்காக ரூ. 11.51 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. தரை மட்டத் தொட்டி கட்டுகின்ற பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் பணி விரைவில் முடிந்து பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. செது. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு நகராட்சி நிதிநிலைமையில் மிகவும் பின் தங்கியிருக்கின்ற நகராட்சி. சம்பளம் கொடுப்பதற்குக் கூட வழியல்லாமல் பல மாதங்கள் அங்கே சம்பளம் கொடுக்க முடியாத ஒரு நிலைமையில் இருக்கிறது. அந்த வகையில் இந்த நகராட்சியிலிருந்து ஆயிரம் ரூபாய்கூட இந்தத் திட்டத்திற்கு செலவு செய்ய முடியாத ஒரு அவல நிலையில் இருக்கிறது. ஆகவே 4½ லட்சம் ரூபாயை இந்த நகராட்சி தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ரூ. 27 லட்சத்திற்கு இந்தத் திட்டம் முதலிலே போடப்பட்டது. அந்த 27 லட்சம் ரூபாயை அரசால் ஒரே நேரத்திலே வழங்க இயலாத காரணத்தினால்தான் மாவட்ட ஆட்சித் தலைவரை பல முறை அணுகி அந்த 15 லட்சம் ரூபாயைப் பெற்றோம். இந்த 11 லட்சம் ரூபாயை அரசிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கேட்டு, கடிதங்கள் வரப் பெற்று, நான் அமைச்சரைப் பார்த்துக் கேட்டிருக்கிறேன். அவரும் ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். தயவுகூர்ந்து இந்த 11 லட்சம் ரூபாயை இந்தத் திட்டத்திற்கு அளிப்பார்களேயானால் இந்தக் கோடைக் காலத்திலே அந்த செங்கற்பட்டு நகராட்சியில் மிகுந்த குடிதண்ணீர்ப் பிரச்சினை தீரும் என்கின்ற வகையில், அந்த நல்லதிட்டத்தை தங்கத் தலைவி, புரட்சித் தலைவி நிறைவேற்றியதாக ஒரு மகிழ்சிகரமான செய்தியை மக்கள்ஏற்றுக் கொள்வார்கள். எனவே இந்த அரசு இதை நிறைவேற்றிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு நகராட்சியைப் பொறுத்த வரையில்

1995 மே 2]

1926-ஆம் ஆண்டு, இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பயனுக்கு கொண்டுவரப்பட்டது. படிப்படியாக அங்கே மக்கட் தொகை அதிகரித்ததன் காரணமாக 1961-ஆம் ஆண்டு, 1974-ஆம் ஆண்டு, 1983-ஆம் ஆண்டு, 1991-ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு, இன்றைக்கு குடிநீர்த் திட்டம் திம்மாவரம், மற்றும் ஒமளூர் ஆகிய இடங்களிலிருந்து பாலாற்றுப் படுகையிலிருந்து நீர் உறிஞ்சிக் கிணறுகள் மூலமாக சுமார் 28 லட்சம் லிட்டர் குடிநீர் இன்றைக்கு அந்த மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 50 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் மட்டும் தான் இன்றைக்கு ஒரு குடிநீர்த் திட்டம் அங்கே செயலாக்குவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டு, இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு மொத்தமே ரூ. 15.20 லட்சம்தான் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்குண்டான திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் அரசு ரூ. 11 லட்சம் வழங்கவேண்டுமென்று சொன்னால், அது எதற்காக என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடவேண்டும். இந்தத் திட்டப் பணிகளைப் பொறுத்த வரையில் ரூ. 15.20 லட்சம் இருந்தால், இந்தத் திட்டப் பணிகள் முடிவுற்றுவிடும். இன்றைக்கு ரூ. 11.51 லட்சம் செலவு செய்து, அந்தத் திட்டத்தில் தற்போது தலைமைப் பணியிடம், நீரேற்று நிலையம், நீர் இறவைகள் பொருத்துதல், நீரேற்றுக் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. தரைமட்ட தொட்டிகட்டும் பணி மட்டும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

செங்கற்பட்டு நகராட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நிதிநிலை ஆய்வு செய்யப்பட்டு அங்கே அந்த நகராட்சி நல்ல நிலையில் இயங்குவதற்காக இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தது போல், ரூ. 1,000 கூட செலுத்த முடியாத நிலை இருக்கிறதென்று சொன்னார்கள். இன்றைக்கு அந்த நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் ரூ.1 இலட்சம் இந்தத் திட்டத்திற்கென நகராட்சி வழங்கியிருக்கிறது. அங்கே மேலும் இதற்கென நிதிச் சுமை ஏற்படக் கூடாது என்ற அடிப்படையிலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் ரூ.10 லட்சம் ஏற்கெனவே வைப்பு நிதி கொடுத்ததற்கு மேலாக இத்திட்டத்திற்கு ரூ.5 லட்சத்தைக் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் மூன்று மாதத்திலே இந்த அரசு அந்தத் திட்டத்தை முடித்துக் கொடுத்து, நத்தம் பகுதி தட்டான்மலை போன்ற குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.